
# ஆத்மஜோதி



மாணிக்கவாசக சுவாமிகள்

பிரமாதீச ௵ ஆனி ௴ 1973

2



ஓர் ஆத்மீக மாத வெளியீடு



எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

-சுத்தானந்தர்.

ஜோதி-25 பிரமாதீச ஸ்ரீ ஆனி மீ 1ம் உ (15-6-73) சுடர் — 7.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| திருவாசகச் சிறப்பு | 129 |
| திருவாசகத் திருவாசகங்கள் | 130 |
| பிரிவுத் துன்பமும் பிரியாக்காதலும் | 131 |
| மங்கலம் என்ருல் என்ன? | 137 |
| சோதனே போதுமையா! | 141 |
| நாவலர் சைவ விஞ விடைகள் சிங்களத்தில் | 142 |
| என் வாழ்வில் ஒரு திருப்பம் | 145 |
| பிறப்பும் இறப்பும் | 147 |
| மனிதப்பிறவியே புனிதப் பிறவி | 155 |
| இயற்கையே சோதிடம்—25 | 157 |


## ஆத்மஜோதி சந்தா விபரம்


ஆயுள்சந்தா 100—00
வருடச்சந்தா 5—00
தனிப்பிரதி சதம் 50

கௌரவ ஆசிரியர்: திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர்: திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி. போன்: 353.

# திருவாசகச் சிறப்பு!

அருள்வாத வூரர்சொல அம்பலவர் தாமெழுதும்
திருவாசகத்தைத் தெளிந்தால்—கருவாம்
பவகதியும் நீங்கிப் பரமரரு ளாலே
சிவகதியும் உண்டாம் சிவம்.

❁

கற்பாந்த காலங் கடவாக் கடல்கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே—அப்பன்
உருவா சகங்கொண் டுரைத்த தமிழ்மாலைத்
திருவா சகம் என்னும் தேன்.

❁

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

❁

போதலர்ந்து தேன்சொரியும் பொன்னம் பலத்திலுறை
வாதவூர் எங்கோமான் வாசகத்தை—ஓதிப்
பிறவிப்பிணி நீக்கிப் பேரின்ப வெள்ளச்
செறிவுக்குள் செல்வர் சிறந்து.

❁

# ★ திருவாசகத் திருவாசகங்கள்!

வாழ்கின்ருய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்ருய் ஆழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்ருய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்ருய் நீஅவலக் கடலாய வெள்ளத்தே.

ஆடுகின்றிலை கூத்துடையான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறல றிலைசெய்வ தொன்றறியேனே.

தவமே புரிந்திலன் தண்மலரிட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை யேன்உனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி லேன்நின் திருவடிக்காம்
பவமே யருளுகண் டாய்அடி யேற்கெம் பரம்பரனே.

வருந்துவன் நின்மலர்ப்பாத மவைகாண்பான் நாயடியேன்
இருந்துநல மலர்புனையேன் ஏத்தேன்நாத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தாய் அருளமுதம் புரியாயேல்
வருந்துவனற் றமியேன்மற் றென்னேநான் ஆமாறே;

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.

★

# பிரிவுத் துன்பமும் பிரியாக் காதலும்!

—ஆசிரியர்—

பேயோடு பழகினுலும் அதனைவிட்டுப்பிரிதல் முடியாத காரியம் என்று பெரியோர் கூறுவர். அப்படியானுல் தாயைவிட்டுக் குழந்தைபிரிவதும் காதலியைவிட்டுக் காதலன் பிரிவதும் இறைவனை விட்டு ஆன்மாக்கள் பிரிவதும் எத்தகையதுன்பச் செயல்கள் என்பதை நாம் சிறிது கற்பனை பண்ணிப் பார்க்கலாம். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு பிரிவு தாங்க முடியாத துன்பத்தை அளிக்கும்.

காதலன் கல்விகற்பதற்காகப் பிரிதலும், பொருளீட்டுதற்காகப் பிரிதலும், யுத்தத்திற்காகப்பிரிதலும் பண்டைய தமிழ்நாட்டு வழக்கங்களாக இருந்தன. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில் நடுநின்ற பொருள் முக்கியமானது. ''நடுவண தெய்த இருதலையும் எய்தும்'' என்பது பெரியோர் கருத்து. பொருள் இருந்தால் அறம் செய்யலாம். இன்பம் அனுபவிப்பதற்கும் பொருள் காரணமாகின்றது. மன்னர்களுக்கும் முக்கியமானது பொன்னே. ஐந்தாண்டுத் திட்டம், ஏழாண்டுத் திட்டம், பத்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற வேண்டுமானுல் முக்கியமாக வேண்டியது பொன்னுகும். முற்காலத்தைப் போல இந்திரலோகம் புக வேண்டினுலும் தற்காலத்தைப் போல சந்திரலோகத்தை அடைய வேண்டுமானுலும் செலவழிக்க நிறையப் பொன் வேண்டும்.

உடையவனும் பொன்னை விரும்புகிருன். இல்லாதவனும் பொன்னை விரும்புகிருன். பொன்னைவிரும்

பாதவர் எவருமில்லை. பொன் இருந்தால் இம்மைக் கும் மறுமைக்கும் வேண்டிய எந்தக் காரியத்தையும் தடையின்றிச் செய்து வெற்றிகண்டு விடலாம். இல்லை என்னும் கொடுமையை உலகில் இல்லையாகச் செய்யவேண்டுமானால் முக்கியமாக வேண்டுவது பொன்னே.

புதுமணத்தம்பதிகள் இருவர். இருவரும் நல்ல செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர்கள். ஒத்த நலனும், ஒத்த குணமும், ஒத்த செல்வமும் உடைய வர்கள். எதற்கும் குறைவில்லாத குடும்பம். மண மகனுக்கு ஒரு குறை. முன்னோர் தேடி வைத்த பொருளைச் சுகிப்பதில் இன்பம் காணமுடியவில்லை. தான் பொருள் தேடிக் காதலியை மகிழ்விக்கவிரும் பினான். இதனைக் காதலியிடம் எப்படிச் சொல்வது என்று நெடுநாள் உள்ளத்திலே போராட்டம். பல நாள் முயன்றும் தோல்வி கண்டான். பிரிவுத்துன் பத்தை தலைவி சகிக்கமாட்டாள் என்பதை அவன் உணர்ந்திருந்தான்.

தன் பிரிவைப்பற்றித் திடீரென்று சொன்னால் ஒப்புக்கொள்ள மாட்டாள் என்று பேச்சைக் கீழ்க் கண்டவாறு தொடங்கினான். "உலகில் அரசர் களாய் இருந்தாலும், அவர்கள் எண்ணியதை முடிப்பதற்குப் பொன்வேண்டியிருக்கிறது," என்று பீடிகை போட்டான். இதனைச் சொல்லி முடித்தானோ இல்லையோ காதலியின் கண்கள் குளமாக நிரம்பின. "ஆகா என் கணவர் என்னைவிடப் பொன் பெரிது என்று எண்ணும்படி ஆகிவிட்டதே இனிப் பொன் எங்கே கிடைக்கும் என்று தேட ஆரம்பிப்பாரே. அதைச் சம்பாதிப்பதற்காக என்னைப் பிரிந்து போய்விடுவாரே" என்று காரணகாரியத் தொடர்ச்சி யாகப் பல எண்ணங்கள் அவள் உள்ளத்தைத் தாக்கித்துவைத்தன. அப்படியே மயங்கி விழுந்து விட்டாள்.

அருகிலிருந்த குடத்திலுள்ள நீரை எடுத்து முகத்தில் தெளித்தான். விசிறி எடுத்து விசிறினுன். கைகால்களைச் சூடுபிறக்கத் தேய்த்தான். அடுத்த விஞடியில் அவளுக்கு நினைவு திரும்பியது. கண்களை மிரளமிரள விழித்தாள்.

"என் அன்பே உன்னைவிடப் பொன்னை பெரிதாக மதிப்பேனு? நீ ஏன் இவ்வாறு வருத்தம் அடையவேண்டும்?" என்று கூறினுன். அவளுக்கு அப்பொழுதுதான் முழு உணர்வும் வந்தது. திடுக்கிட்டுப் பதறி எழுந்தாள். காதலனைக் கைகளால் தொட்டுத் தடவிப்பார்த்தாள். அவன் திருப்பாதங்களில் தலையை வைத்து வணங்கினுள். வணங்கிக் கொண்டே அவனை என்ன கேட்டாள் தெரியுமா? "என்னைத் தவிக்க விட்டுவிட்டுப் பொருள் சம்பாதித்து விரைவில்வருகிறேன் என்று போன தாங்கள் இப்படியா அத்தனை நாள் கழித்து வருவது?" என்று கேட்டாளாம். எப்படியாவது அவன் வந்து சேர்ந்தானே என்று மகிழ்ந்து அவனை வழிபட்டு வணங்கினுளாம். உலகில் முனிவர்க்கும் மன்னர்க்கும் பொன்தான் முதன்மையாய் வேண்டி இருக்கிறது என்று சொன்னதைக் கேட்டதும் அந்தப் பொன்னை ஈட்டுதற்காக அவன் தன்னைப் பிரிந்து போய் விட்டதாகவே எண்ணிவிட்டாள்.

இந்த அருமையான விரிந்த கருத்தை மணிவாசகப்பெருமான் திருக்கோவையாரிலே இரத்தினச் சுருக்கமாகத் தருகின்ருர்.

"முனிவரும் மன்னரும் முன்னவ பொன்னுள்—
முடியுமெனப்
பனிவருங் கண்பர மன்திருச் சிற்றம்பல மனையாய்
துணிவரு நீர்மையி தென்னென்று தூநீர் தெளித்தளிப்ப
நனிவரு நாளிதுவோ வென்று வந்திக்கு நன்னுதலே"

உண்மைக் காதலர்களிடையே திகழும் அன்பின் கொடுமுடியை எட்டிப் பிடித்திருக்கிறது இப்பாடல். தலைவன் பிரியக் கருதினன் என்று மணிவாசகர் இதில் குறிப்பிடவில்லை. ஆயினும் தலைவி இதனை உய்த்துணர்ந்து கொண்டாள். தலைவி மூச்சையானாள் என்று மணிவாசகர் கூறவில்லை. ஆனால் தலைவன் தூநீர் தெளித்து, அளித்தான் என்றதால் நாம் உய்த்துணர முடிகிறது. தலைவன் தலைவியை விட்டுச் சிறிதும் பிரியவே இல்லை. அப்படியிருந்தும், அவன் நெடுநாள் கழித்துத் திரும்பி வந்ததாகத் தலைவி நொந்து கொள்கிருள். காரணம்? அவள் மூர்ச்சை அடைந்த சிறிய நேரம் கணவனைப் பிரிந்து காலங்கள் பல கடந்துவிட்டன என்ற நினைவு.

கணவன் மனைவியின் தொடர்பு இடையிலே தோன்றுவது, கடவுளுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு என்றும் நின்று நிலவுவது. கணவன் மனைவியின் காதலைக் கண்டோம். நம்மைப் படைத்த கடவுளை நாம் இவ்வளவுக்கு காதலிக்கிறோமா? அவனை மறந்தும் பிரியலாகாது என்று மனதில் நினைக்கிறோமா? அவனைப் பிரியாதிருக்க முயலுகிறோமா? அவனைப் பிரிந்துவிட்டோமே என்று வருந்துகிறோமா?

மனைவியிடம் காதலித்து உருகுகிறவன் அது கடமை என்று நினைப்பதில்லை. அதை ஒரு தொல்லையாகவுங் கருதுவதில்லை. மனைவிக்குப் பயந்தும் அவளைக் காதலிக்க முடியாது. மனைவியிடமுங் கணவனிடமும் இயல்பாகத் தானகவே தன்னை அறியாமல் காதல் விளைகிறது. அதுபோன்று இறைவனிடமும் பக்தி பெருகிப் பாயவேண்டும். கடவுளுக்கும் இந்த உயிருக்குமுள்ள தொடர்பு நேற்று இன்று வந்த உறவன்று. மிகநெடும் பண்

டைக் காலம் முதல் நேர்ந்து வருகிறது. கடவுளு டைய கருணையானது, உயிர்களை நாடி ஓயாமல் உருகிப் பாய்கிறது. கடவுள் உயிர்களைத் தேடி ஏங்குகிறுன். தன்னை அறிந்து வந்து கூடிக் கொள்ளும்படி அல்லும் பகலும் கூவி அழைக்கின் ருன். அவை வராவிடில் கண்ணீர் பெருக்குகிறுன். ஒரு கணப்பொழுதுகூட உயிர்களைப் பிரிந்திருக்க கடவுளால் முடியாது.

ஆனுல், உயிர்களோ, அவனைத் தேடுவதும் இல்லாமல் பிரிந்து, மறந்து, அவனைவிட்டு நெடுந் தொலைக்குச் சென்று கொண்டிருக்கின்றன. கடவுள் கண்ணுக்குப் புலப்படாத நிலையில், அவனை எவ் வாறு பிரியாமல் சேர்வது? என்று கேட்கலாம். அவன் எப்பொழுதும் பிரியாமல் உயிருக்குயிராய் ஒட்டிக்கொண்டிருக்கிறுன் என்பதை உணர்ந்து அவனது அருட்பாதையில் அறத்தொழில் புரிவதே அவனைப் பிரியாமல் அவனேடு கூடி வாழ்வதாகும்.

உயிர்கள் தீமையைச் செய்யச் செய்ய, அவை ஆண்டவனைப் பிரிந்து ஆண்டவனை வருத்தித் தாங்களும் வருந்துவதாகவே முடியும். பொன்னைப் பெரிதென்று மதித்து தலைவன் தலைவியைப் பிரிவது போல உயிர்கள் உலக வாழ்க்கையைப் பெரி தென்று கருதி இறைவனைப் பிரிந்து நீங்குவ தாகும். ஆனுல் இறைவன் நம்மைத் தினையளவு கூடப் பிரியவிடாமல் இரண்டறக் கலந்து வாழக் கருதுகிறுன். அதனை உணர்ந்து அவனை மறவாமல் அவனுக்குப் பக்தி செலுத்தும்வரையில், நாம் பாவங்களைச் செய்யாது அறவினை புரியும் புண்ணிய வான்கள் ஆவோம். இதனை மணிவாசகர் திருவாச கத்தில் கசிந்துருகிப் பாடுகிறுர்.

வினையென் போலுடை யார்பிறர் ஆர்
உடையான் அடி நாயேனைத்
தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப்பு அன்று
மற்று அதனாலே
முனைவன் பாதம் நல்மலர் பிரிந்திருந்தும்
நான் முட்டிலேன் தலைகீறேன்
இனையன் பாவனை இரும்பு கல்மனம் செவி
இன்னது என்று அறியேனே.

என்போலக் கொடிய வினையாளன் யாருமில்லை. அதை முன்னிட்டு என்னைப் பிரித்து வைப்பது இறைவனுடைய திருவருள் நோக்கமன்று. என்வினையின் விளைவாக ஆதிபகவனிடமிருந்து நானே பிரிந்திருக்கின்றேன். அதைக் குறித்து வருந்தி நான் தலையை மோதிக்கொள்ளவில்லை. அதைப் பிளக்க முயலவுமில்லை. இரும்பு போன்ற நான் உணர்ச்சி அற்றவன். என் மனம் கல். இனிக்காது, எத்தகையது என்று எனக்கே தெரியாது.

இறைவனும் உயிரும் அடையும் பிரிவுத் துயரை அனுபவிக்க மணிவாசகரைத் தவிர வேறு யாரால் தான் முடியும். அவர் தன்னைத் தலைவியாக்கி இறைவனைத் தலைவனுய்க் கொண்டு சன்மார்க்க நெறியில் நின்றவரல்லவா?

## ஆசைகள்

கானகத்தில் வாசம் செய்தாலும் ஆசையுள்ளவர்களை அந்த ஆசையே அடிமைப்படுத்துகிறது. வீட்டிலே இருந்தாலும், ஐம்புலன்களையும் அடக்குவதே தபசு. ஆசையைத் துறந்து, தலை குனியத்தக்க காரியம் எதையும் செய்யாதவனுக்கு அவன் வீடே தபோ வனம்.

—பஞ்சதந்திரம்

# மங்கலம் என்றால் என்ன?

—திரு. டி. டி. நாணயக்கார—

பெரும்பாலும் தமிழர்களுக்கு பௌத்த சமய போதனைகளைப் பற்றிய தெளிவான அறிவு குறைவு. புத்த பகவானுடைய வாழ்க்கையைப் பற்றியும் அவருடைய போதனைகளின் அடிப்படைகளைப் பற்றியும் சுருக்கமாகத் தமிழ் சஞ்சிகைகளுக்கு அல்லது தினசரிகளுக்கு தொடர்ந்து எழுதும்படி பலமுறை எனது தமிழ் நண்பர்கள் பலர் வேண்டினார்கள். அதற்கிசைந்து அவர் (புத்த பகவான்) அருளிய பல சூத்திரங்களில் ஒன்றான 'மங்கல' சுத்தத்தைப் பற்றி விளக்குகின்றேன். அது:

பழைய சம்புத் தீபத்திலுள்ள நகரம், பட்டணம் ஊர் என்பவற்றில் 'மடம்' போன்ற மண்டபங்கள் இருந்தன. அங்கே கூடும் சனங்கள் பல விடயங்களைப் பற்றி உசாவுவது வழக்கம். அவர்களுக்குள் 'மங்கலம்' என்றால் என்ன என்ற பிரச்சனையும் தோன்றியது. காலையில் எழுந்த உடனே மனத்துக்கு இன்பம் கொடுக்கும் ஏதாவது ஒன்றைக் கண்டால் அது மங்கலம் என்றார்கள்.

இனிமையான ஒலி அல்லது சொல் கேட்க வசதி கிடைத்தால் அது மங்கலம் என்று வேறு சிலர் கூறினார்கள். நறுமணம், உருசியான உணவு அல்லது நல்ல ஸ்பரிசம் கிடைப்பதுதான் உண்மையான மங்கலம் என்று வேறு சிலர் சொன்னார்கள். இப்படியே மங்கலம் என்றால் என்ன என்று மூன்றுவிதமாகக் கூறியவர்கள் தத்தம்முடைய கருத்தைவிட மற்றக் கருத்தை நம்பவில்லை. ஆகையால் இந்தியாவில் எல்லா இடங்களிலும் இந்தப் பிரச்சனை

வாதத்துக்கு அடிப்படையாக வந்து விட்டது. கடைசியில் தேவர்களுக்கிடையிலும் இப்பிரச்சனை உண்டாக தேவர்களும் விவாதம் செய்தார்கள்.

ஒருநாள் நடுநிசியில் ஒரு தேவதை இந்திரனுடைய அநுமதியுடன் புத்த பகவான் தங்கியிருந்த 'சஹெத் மஹெத்' நகரத்தில் ''ஜேதவன'' என்ற இடத்திற்கு வந்தார். வந்த தேவதை புத்த பகவானுக்கு வணக்கஞ் செய்து 'மங்கலம்' என்பதை விளக்கும்படி வேண்டிற்று. இம்மையிலும் மறுமையிலும் தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் நன்மை செய்யும் — மங்கலம் என்ன? என்ற கேள்விக்கு புத்த பகவான் கீழ்க்காணும் முப்பத்தெட்டுச் செயல்களே மங்கலம் என்று விளக்கினர். அவையாவன:—

படியாத மூடர்களுடன் சேராமல் இருப்பது; படித்த நற்குணமுள்ளவர்களோடு சேர்தல்; வணங்க வேண்டியவர்களை வணங்குதல் - அதாவது மதிப்புக்கு உரியவர்களை மதித்தல், புண்ணியம் செய்வதற்குத் தகுதியுள்ள இடங்களில் — பிரதேசங்களில் குடியிருத்தல்; பூர்வ ஜன்மத்தில் புண்ணியம் செய்திருத்தல்; மனதை அடக்குதல் — அதாவது நற்செயல்களில் மட்டுமே விருப்பங் கொள்ளல்; அறிவு ஆற்றல் இருத்தல்; குற்றமில்லாத கைத்தொழிலில் ஈடுபடுதல், நல்ல ஒழுக்கமாக இருத்தல்; பொய், கோள், வீண் வார்த்தை சொல்லாமல் எப்பொழுதும் உண்மை பேசுதல்; தாயை உபசரித்தல்; தந்தையை உபசரித்தல்; மனைவி மக்களைப் பேணுதல், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல்; மது, மாமிசம், வெடி மருந்து, நஞ்சு போன்ற பொருள்களை விற்பனை செய்வது போன்ற கெட்ட தொழிலின்றி — விவசாயம் வியாபாரம் போன்ற தொழில்களைச் செய்தல்; தானம் செய்தல்;

பௌத்த தர்மத்தில் கூறியிருக்கிற பத்து விதமான புண்ணிய கிரியைகளில் ஈடுபடுதல் — செய்தல்; உற்ருர், உறவினர்களுக்கு உதவி செய்தல், துணை செய்தல்; குற்றமில்லாத கிரியைகளில் ஈடுபடுதல், சீலம் விரதங்கள் போன்ற நற்கிரியைகள் செய்தல்; பாவங்கள் செய்வதில் விருப்பமில்லாமல் இருத்தல் அல்லது பாவங்களில் இருந்து விலகுதல்; மதுபானத்திலிருந்து விலகுதல்; தாமதமில்லாமல் புண்ணியக் கிரியைகள் செய்தல்; மரியாதை செய்ய வேண்டியவர்களுக்கு மரியாதை செய்தல்; கீழ்மையான பழக்க வழக்கங்கள் இல்லாமை; கிடைத்த அளவில் சந்தோஷம் அடைதல் போதாது என்று நினைக்காமல் கிடைத்ததை அநுபவித்து சந்தோஷப்படுதல்; செய்ந்நன்றி கொல்லாமை, தனக்கு உதவி செய்தவர்களுக்கு தானும் பிரதியுபகாரம் செய்தல்; பிரசங்கங்களை கேட்டல்; பொறுப்புடையவனுக இருத்தல்; நற்போதனைகளுக்கு அடங்குதல்; பௌத்த பிக்குமார்களுடன் பழகுதல்; தருமத்தைப்பற்றி தகுந்த நேரங்களில் உசாவுதல்; ஆசைகள் அல்லது காமங்களைக் குறைத்தல் அல்லது அடைத்தல்; பிரம்மச்சாரியாக இருத்தல்; துக்க, சமுதாய, நிரோத, மார்க்க என்ற நாலு வகையான சத்தியங்களை — உண்மைகளைக் கண்டுபிடித்தல்; நிருவாணத்தை உணர்த்தல் (தெரிந்துகொள்ளல்); இலாபம், நஷ்டம் புகழ், இகழ், செல்வம், வறுமை, சுகம், துக்கம் என்னும் எட்டு விதமான உலக தருமங்களின் பயனுக வரும் எந்த நிலையிலும் அசையாமல் இருத்தல்; சோகம் தோன்ரு மனமுள்ளவனுக இருத்தல். இராகம், துவேசம், மோகம் (அறியாமை) இல்லாத தூய்மையான மனம் இருத்தல்; பயமில்லாத துணிவுள்ள மனம் இருத்தல் என்ற 38 நற்கிரியைகளை இவ்வுலகிலுள்ள 'மங்கலம்' என்று பிரசங்கம் செய்தார்.

இப்படிப்பட்ட மங்கல செயல்களில் ஈடுபட்டு பகைவர்களால் தோல்வியடையாத மக்கள், என்றும் எந்த இடத்திலும் சுகத்துக்கு ஆளாகி விடுவர். இது அவர்களுக்கு என்றும் 'மங்கலம்' ஆகிவிடும் என்று அருள் புரிந்தார். நாமும் மேற்கூறிய நற்கிரியை களை நன்கு அறிந்து, நமது வாழ்க்கையிலும் கைக் கொண்டு இம்மையிலும் மறுமையிலும் சுகம் அநுப விக்க முயற்சி செய்ய வேண்டும்.

சிங்காலோவாத, பராபவ, வசல போன்ற சுத் தங்களில் வருகிற போதனைகளும் அன்றாட வாழ்க் கைக்குத் தேவையானவை. அவைகளும் தமிழாக்கி இடையிடையே ஆத்மஜோதி சஞ்சிகைக்கு அனுப்ப விரும்புகிறேன். வாசகர்கள் சைவத்தில் இருக்கிற போதனைகளுக்கு இவைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து ஆனந்தமடைந்தால் - அதுவே என் மகிழ்ச்சி.

வாழிய நலனே, வாழிய நலனே.

## இடையூறு

அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் அடைய முயலும் ஒருவனுக்கு எத்தனையோ இடையூறு கள் முளைப்பதாகத் தோன்றும். உண்மையில் அப்படி ஒன்றும் இல்லை. அவை அவனுடைய மனத்தோற்றங் களே!

சந்தன மரத்திலே பாம்பு வசிக்கிறது; நீரிலே கம லத்துடன் முதலையும் வாழ்கிறது; யோக்கியர்களுக்கு அயோக்கியர்கள் கூற்றுவன் ஆவார்கள் என்பது தெரி யாதா? இடையூறு இல்லாத போகவாழ்க்கையின் சுகத்தை எங்கேதான் காண முடியும்?

—பஞ்சதந்திரம்

# சோதனை போதுமையா!

(இராசம்மா—சண்முகநாதன்)

சோதனை போதுமையா; இறைவா
வேதனை தீருமையா!

வஞ்சகம் அறியேனையா; பிறர்
வாழ்வதைப் பழித்து என்றும்
நெஞ்சகம் பொறுமை கொண்டு
நீசனாய் மாறவில்லை; நின்னருளைக்
கெஞ்சியே வாழும் இந்தப்
பாவியின் துயரைப் போக்க
அஞ்சாதே என்று கூறி
அபயகரம் தாருமையா ... !
சோதனை போதுமையா; இறைவா
வேதனை தீருமையா

தந்தையை நோகுவேனோ; பெற்ற
தாய்தனை நோகுவேனோ; உடன்
பிறப்பினை நோகுவேனோ; கொண்ட
பதியினை நோகுவேனோ; உற்ற
நண்பரை நோகுவேனோ; எந்தையே
தினம் வணங்கும் உந்தன்
திரு நாமத்தை நோகுவேனோ; ஐயோ
எதனைத் தான் நோகுவேன்; எந்தன்
விதியைத் தான் நோவேன்; இறைவா
என்னையே நொந்து வாழும்
ஏழையென் நோவைத் தீர்க்க
இன்னு மேன் தாமதமோ
எழுந்தோடி வாருமையா

சோதனை போதுமையா; இறைவா
வேதனை தீருமையா!

# நாவலர் சைவ வினு விடைகள் — சிங்களத்திலும் — வெளியிடுவதற்கு வேண்டுகோள்!

—டி. டி. நாணுயக்கார—*86, தந்திரிமுல்ல-பாணந்துறை.*

ஏறக்குறைய நூற்றைம்பது வருடங்களுக்கு முன் சிறுவர்களுக்காக வினுவிடை வடிவில் ஸ்ரீ லஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களால் இயற்றப்பட்ட சைவ வினுவிடைகள் சைவர்களும், தமிழர்களும் மட்டு மன்றி, சிங்களவர்களும் கட்டாயமாக வாசிக்க வேண்டிய நூல்கள் என்பது எனது கருத்தாகும். சைவசமய ஆசாரங்களே மட்டுமன்றி, தமிழர்களு டைய கலாச்சாரங்கள், பண்பாடுகள் எவையென் பதை அறிவதற்கும் இப்புத்தகங்கள் உதவுகின்றன.

அன்றுட கடமைகள் எவை, சமய சம்பந்தப் பட்ட கிரியைகள் எவை, தகாத காரியங்கள் எவை, செய்யக்கூடிய காரியங்கள் எவை, சுகாதார விதிகள் எவை, கல்வி கற்பதனுல் வரும் நன்மைகள் எவை என்பன போன்ற பல விடயங்களே இலகுவான முறையில் இரத்தினச் சுருக்கமாக இந்நூல்கள் விளக்குகின்றன.

நூல்கள் சிறியன. எனினும் அவற்றில் அடங் கிய பொருள் பெரியது; வாழ்க்கைக்கு வேண்டியது; காலத்தோடு ஒத்தது.

சைவத்திற்கும், பௌத்தத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை அறிவதற்கு இந்நூல்கள் மிகவும் உதவியாகின்றன. அத்தகைய நெருங்கிய தொடர்பு நிலேத்து வளர்வதற்காக சிங்களவர்களும்

இவற்றைக் கற்க வேண்டுமென்பது பலருடைய கருத்து.

பிரபல சமூக சேவையாளர் ஒருவருடைய வேண்டுகோளுக்கிணங்க நான் மேற்கூறிய நூலை சிங்களத்தில் மொழி பெயர்த்துள்ளேன். தமிழ் சிங்கள இலக்கிய பரிவர்த்தனை, இரு சாகியத்தாரிடையே ஒற்றுமையை வளர்க்கும். ஆகவே சிங்கள இலக்கியங்களைத் தமிழிலும், தமிழ் இலக்கியங்களைச் சிங்களத்திலும் மொழிபெயர்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு பல ஆண்டுகளாக இத்துறையில் பணியாற்றி வருகிறேன். நான் சிங்களத்தில் மொழி பெயர்த்த இராஜாஜி கதைகள் என்ற நூல் இப்பொழுது அச்சில் இருக்கிறது. இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் வெளிவரும்.

நாவலருடைய சைவ வினுவிடைகள் (முதலாம் பாகம்) சிங்களப் பிரதியை அச்சிடுவதற்கு வேண்டிய உதவி செய்ய விரும்பிய தமிழ் வள்ளல் ஒருவர் இருந்தால், சிங்கள மொழிபெயர்ப்புப் பிரதியை அவருக்கு இலவசமாகக் கொடுக்க நான், தயாராக இருக்கிறேன் என்பதைத் தமிழ் சமுதாயத்துக்கு விசேடமாக சைவாபிமானிகளுக்கு அறிவிக்க தங்களுடைய சஞ்சிகையில் சிறிய இடம் கொடுத்து உதவினுல் அதுவும் பெரிய பொதுப்பணி ஆகிவிடும்.

---

## ஆரோக்கியம்

இவ்வுலகத்தில் தானத்தைப் போன்ற செல்வம் வேறு இல்லை; திருப்தியைப் போன்ற சுகம் வேறு இல்லை; ஒழுக்கம் போன்ற ஆபரணம் வேறு இல்லை; ஆரோக்கியத்தைப் போன்ற லாபம் வேறு இல்லை!

—பஞ்சதந்திரம்

# என் வாழ்வில் ஒரு திருப்பம்!

—சீதா பாபு—

"இறையருள் பெற்றுய்ய விருப்பம் ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டால் இறைவனை அடையும் வழியைக் காட்டும் குருவை இறைவனே அனுப்பி வைப்பார்" என்பது இறையருள் பெற்ற ஆன்ம ஞானிகளின் அனுபவ உண்மை. எனக்கு சிறுவயதிலேயே கடவுளை காண வேண்டுமென்ற தீவிர ஆசை. உலகப் பொருட்கள் எதிலுமே நாட்டம் ஏற்படவில்லை. அவ்வமயம் ஓர் தேவி சித்தர் தொடர்பு கிட்டியது. அவர் எமது இல்லத்திற்கு அடிக்கடி வருவார். வரும்பொழுதெல்லாம் அவர் செய்யும் பூஜைக்கு உதவிகளைச் செய்து பூஜைகளிலும் பங்குபற்றி வந்தேன். அவரும் நான் கடவுளை இப்பிறவியிலேயே அடைவேன் என உறுதிமொழி கூறிவந்தார்.

எனக்கு 18 வயது நிரம்பியதும் பெற்ருேர் என்னை திருமணம் செய்து கொடுக்க ஆசைப்பட்டு அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதையறிந்த நான் திருமணம் செய்வதில்லை என்று கண்டிப்பாக மறுத்துவிட்டேன். பேரின்பத்தின் எல்லையைக்காண துடித்த என் மனம் சிற்றின்பத்தில் மூழ்க விரும்பவேயில்லை. எனக்கும் பெற்ருேருக்கும் நடந்த போராட்டத்தில் பெற்ருேர் வெற்றிபெற்று விட்டார்கள். இதுவும் இறைவன் திருவருள் போலும் என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டேன். 1959—ம் ஆண்டு எனது சொந்த ஊரான திருவனந்த புரத்தில் திருமணம் நடந்தது. எனக்கு வாழ்க்கைத் துணைவராக அமைந்தவர் இலங்கையர். அவரோடு இலங்கை வந்து14வருடங்கள். மூன்றுபிள்ளைகளுக்குத்தாயாகி

இல்லறத்தை சிறப்பாக நடத்திவருங் காலத்தில் இறைவனை அடைய வேண்டுமென்ற எண்ணம் மட்டும் என்னைவிட்டு அகலவேயில்லை. மனம் எப்பொழுதும் தியானத்தில் ஆழ்ந்திருப்பதையே விரும்பியது.

1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிவ பால யோகி அவர்கள் இலங்கைக்கு வந்தபோது அவரிடம் தற்செயலாக மானசதீட்சை பெறும் பெரும் பேறு கிட்டியதுமன்றி எனக்கு வழி காட்டும் தக்க குரு ஒருவரை அமைத்துத் தருவதாயும் உறுதியளித்தார். அதன் பிறகு எனக்கு, தெய்வ வாழ்க்கைக்கு வழி காட்டும் குருநாதரை எதிர்பார்த்திருந்தேன். இச்சம்பவம் நடைபெற்று சரியாக 6-வது மாதம் வெள்ளவத்தையில் ஒரு வீட்டில் ஸ்ரீ காயத்ரீ பூஜை நடப்பதாகவும், என்னை கட்டாயம் வரும்படியும் என் அன்பர்கள் பலர் வற்புறுத்தினர்கள். ஏதோ அவர்கள் வற்புறுத்தியதற்கிணங்க பூஜைக்குச் சென்றேன்.

பூஜையை யார் நடத்தப் போகிருர் என்று எதிர்பார்த்திருந்தேன். ஏதோ ஒரு அன்பர் எல்லோரையும்போல் சாதாரண உடையணிந்திருந்தார். அவர்தான் ஸ்ரீ காயத்ரீ பூஜை நடத்துபவர் என்று பக்கத்தில் இருந்த பழைய மாணவர்கள் என்னிடம் சொன்ஞர்கள். பூஜை ஆரம்பமாகியது. எல்லோரும் பக்தி சிரத்தையுடன் அமர்ந்து ஸ்ரீ காயத்ரீ மந்திரம் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள்.

என்னையறியாத ஓர் பத்தி சாந்தம் அமைதி என்னிடத்தில் நிலவியது. அக்னி ஹோமம் ஆரம்பித்தவுடன் நான் சுய உணர்வற்று கீழே விழுந்து விட்டேன்.

ஆனால் ஒரு சத்தம் என் காதில் விழுந்தவண்ணமே இருந்தது. 'இவரே உன் குரு, இவரைப் பற்றி வாழ். உன் எண்ணம் நிறைவேறும்!' என்று. இவ்வார்த்தைகளை ஸ்ரீ சிவபால யோகி அவர்களே எனக்கு கூறியதுமன்றி, ஆன்மீக வாழ்க்கைக்கு வழி காட்டும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்ததையும் மிகத் தெளிவாக உணர்ந்து கொண்டேன். பூஜை முடிந்ததும் பூஜை நடத்தியவர், என் நெற்றியில் விபூதியிட நான் எழும்பி அமர்ந்தேன். அதன் பிறகு எனக்கு உபதேசம் செய்து என்னை ஆசீர்வதித்து பிரசாதம் தந்து என்னை அனுப்பினர். அன்று முதல் அவர் நடத்தும் பல பூஜைகளிலும் பங்கு பற்றி தொண்டு செய்து வருகிறேன். என்னை தியானத்தில் அமர கட்டளையிடுவார். தியானத்தில் ஆழ்ந்து பரவச நிலையடைகிறேன். அடிக்கடி அவரைச் சந்தித்து அவரிடம் பல ஆன்ம இரகசியங்களை கேட்டு வருகிறேன்.

---

# ஆண்டவன் பெருமை

உருவம் அடையாளம் ஆகியவை என்ன என்று எப்படி விரித்துப் பேசுவேன்? பார்த்தவர் வேறு யார் தான் வரப் போகிறார்கள்? ஓங்காரம் எல்லையற்றது. அதே ஆதி புருஷனை அறியவில்லை. அந்தப் பொருளின் குல ரகசியத்தை என்ன சொல்வேன்? நட்சத்திரங்கள் இல்லை. சூரியன் சந்திரன் இல்லை. தந்தையின் விந்து ஒன்றுங் கிடையாது. நீர் இல்லை; தரையும் இல்லை; நிலைத்து நிற்கும் காற்றுப் போன்றதும் இல்லை. என்ன பெயர் வைப்பது? அந்த ஆணையாளனை எப்படி வருணிப்பது? இரவுபகல் ஒன்றும் ஆவதில்லை. அப்படிப்பட்டவருக்கு என்ன சாதி குலம் சொல்வது? சூனியமான ஆன்ம ஒளி நிறைந்த மனதில் ஒரு சோதி வெளியாயிற்று. அந்தப் புருஷ ஒளி எதையும் ஆதாரமாகக் கொண்டதில்லை. அந்த ஒளிக்கு நாம் அழிகிறோம். அதற்கு நாம் ஆழ்ந்த பெருமை காட்டுகிறோம். — கபீர்அருள் வாக்கு

# பிறப்பும் இறப்பும்

— மு. இளையதம்பி —

மக்களாகிய நாம் செய்கின்ற நல்வினை தீவினைகளின் காரணமாகப் பிறந்தும், இறந்தும், மீண்டும் பிறவி எடுத்து உலைகின்றோம். பட்டினத்தடிகள்,

"முன்னம் எத்தனை சென்மமோ மூடனுயடியேனும்
அறிந்திலேன்
இன்னம் எத்தனை எத்தனை சென்மமோ
என் செய்வேன் கச்சியேகம்பனே"

என்று கூறுகின்றார். பிறவிக்கு ஏதுவான வழியில் நடந்துகொள்வதினாலேயே நாம் பிறப்பை ஒழிக்கமுடியாதிருக்கின்றோம். உலகத்திலுள்ள மக்கள் எல்லோரும் துறவறத்தை மேற்கொள்ள முடியாது. ஆகையால் இல்லறத்திலிருந்து கொண்டு எவ்வாறு ஒழுகினால் நாம் ஈற்றில் இறைவனை அடையலாம் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

"பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே" என்று அப்பர் சுவாமிகள் கூறுவதைக் கவனிக்கலாம். நாளாந்த வாழ்க்கையில் நாம் விடுகின்ற தவறுகளைக் கவனிப்போம். இறைவனுடைய திருநாமமாகிய பஞ்சாட்சரத்தைத் தினமும் ஓதமறந்துவிடுகின்றோம். இறைவனுடைய பெருமையைப் புகழ்ந்து கூறும் தேவார திருவாசகங்களைப் படிப்பதில்லை; கோயிலுக்குச் சென்று பிரார்த்திப்ப

தில்லை. போசனம் அருந்துவதற்கு முன்பாக ஒரு பூவை இறைவன் பாதங்களிலே சமர்ப்பிப்பதில்லை; நாம் முன் செய்த பாவங்கள் நீங்கத்தக்கதாகத் தினமும் திருநீற்றை அணிவதில்லை. அவ்விதமான மக்கள் பெரும் நோய்களாற் பீடிக்கப்பட்டு இறந்து மீண்டும் பிறப்பு, இறப்பாகிய இரண்டிற்கும் ஆளாய்த் துன்பப்பட நேரிடுகிறது. பிறவியை அறுப்பதற்கு இறைவனுடைய தியானமும் பிரார்த்தனையுமே துணைபுரியும். இல்லறத்திலிருக்கும் ஒருவன் எவ்வாறு ஆன்ம ஈடேற்றத்தைப் பெறலாம் என்பதைச் சிறிது ஆராய்வோம்.

''ஒழியாப்பிறவி எடுத்தேங்கி ஏங்கி உழன்ற நெஞ்சே
அழியாப் பிறவிக்கவுட தங்கேட்டிய நாதியனை
மழுமான கரத்தனை மால்விடையானை மனத்திலுன்னி
விழியாற் புனல்சிந்தி விம்மியழு நன்மைவேண்டுமென்றே''

அனுதிதொட்டு என்றும் இருக்கின்ற கடவுளை மனத்தினால் நினைந்து உருகிக் கண்ணினின்று நீர் விழ விம்மிவிம்மி அழுதால் அவருடைய கருணை உடனே கிடைக்கும். எத்தன்மையருக்கு, உடனே கிடைக்குமென்பது வெளிப்படையாகக் கூறப்படாவிடினும் அடிப்படையாக அமையவேண்டிய கட்டுப்பாடும் ஒழுக்கமும் உண்டு. முதலாவதாக, ஒரு உயிருக்கும் மனம், வாக்கு, காயத்தாலே தீமை செய்யக் கூடாது. பொறாமை, கோபம், காமம் ஆகியன விலக்கப்பட வேண்டியன. உறவினர்; அயலார் அல்லது எவர் மீதும் பொறாமை கொள்ளக் கூடாது. கோபத்தை அடக்காதுவிட்டால் செய்வது இன்னதென்று ஆராயாது தவறான செய்கைகளைச் செய்ய நேரிடும். ஆனால் கோபம் அடைகிற நேரமும் உண்டு. அநீதியைக் கண்டவிடத்து கோபமடைய வேண்டும். ''பிறர் மனை அஞ்சுமின்'' என்றதற்கு உதாரணமாக ஒரு இல்ல

றத்தவன் ஒழுகவேண்டும். இவ்விதமாக ஒழுக்க ரீதியில் நடக்கும் ஒருவன் மனம் உருகி அழுதால் இறைவனுடைய கருணை கிட்டும். இக்கருத்திற் கிணங்கவே "வினையேன் உனைப் பெறலாமே," என்று மணிவாசகப்பெருமான் கூறுகிறார்.

வினைவசத்தாற் பிறந்த ஒவ்வொருவரும் பிராரத்துவ வினையை அனுபவித்தே தீர்க்கவேண்டும். ஆனால் பிராரத்துவம், சஞ்சிதம் என்னும் பழைய பிறவிகளிலே செய்த வினைப்பயனை அனுபவிக்குங் கால் மனம் வருந்தி இறைவனை நினைந்து அழுதால் அவர் அனுக்கிரகஞ் செய்வார். துன்பம் தாங்கக்கூடிய அளவுக்குக் குறைவதுமல்லாமல் இப் பிறவியிலே தீவினை செய்தல் கூடாதென்ற பயமும் உண்டாகும். அதனால் நாளடைவில் திருத்தம் ஏற்பட்டு இறைவனுடைய பிரார்த்தனையே தனக்கு ஈடேற்றம் தரும் என்ற உணர்ச்சி உண்டாகும். ஆகையால் இல்லறத்தவனும் குற்றங்களினின்று நீங்கி ஒழுகினால் பிறவிக்கடலை நீந்த வழி உண்டாகும்.

> "வினைப்போகமே ஒருதேகங்கண்டாய் வினைதானொழிந்தால்
> தினைப்போதளவு நில்லாது கண்டாய் சிவன்பாதநினை"

எடுத்த இப்பிறவியிலேயே உடலைவிட்டு உயிர் நீங்கு முன்னரே சிவனுடைய பாதங்களை உண்மையான மனத்துடனே தியானிக்க வேண்டுமென்று நாம் அறியவேண்டியது அவசியம்.

"உயிர்த்துணை நின்பதமே" என்று கூறும் பட்டினத்தடிகள் நாம்விடுந் தவறுகளை ஒரு செய்யுளிலே வெளிப்படையாகக் கூறுகின்றார்.

"பொய்யை ஒளியாய் புலாலை விடாய் காளத்தி
ஐயரே யென்னுய் அறஞ்செய்யாய் — வெய்ய
சினமே ஒழியாய் திருவைந்தெழுத்தோ தாய்
மனமே உனக்கென்ன மாண்பு."

பொய் பேசுதலும் பஞ்சமா பாதகங்களுள் ஒன்ருகும். நாளாந்த வாழ்க்கையில் மக்கள் பொய் பேசுகின்றனர். பொய் துன்பத்தைக் கொடுக்கும் என்பதை அவர்கள் உணர்வதில்லை. "உள்ளம் பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி" என்று திருவாசகத்திலும், "கனவிலும் பொய் சொல்லா மல்"என்று பட்டினத்தடிகள் பாடலிலும் கூறியிருப் பதைக் காணலாம்.

புலால் உண்ணல் இன்னொரு பாவச்செயலாகும். பல்வேறு தாவர உணவு இருக்கின்றபொழுது ஒரு உயிரைக்கொன்று ஊனை உண்பது எவ்வளவு பாத கச் செயல். எவ்வளவு சீவகாருண்ணியமற்றசெயல். எவ்வளவு அறிவுக்குறைவு; எவ்வளவு இழிவான செயல் என்பது யாருக்கும் தெரிந்த ஒரு விடய மாகும். இறைவனுடைய நாமத்தை உச்சரிப்ப தில்லை. தருமமும் செய்வதில்லை. அறவழியில் ஒழுக முயற்சிப்பதுமில்லை. கோபத்தை நீக்க முயல்வது மில்லை. பஞ்சாட்சரத்தை ஓதுவதுமில்லை. இக்குற் றங்களுக்கீடான மனத்திற்கு என்ன பெருமை இருக்கிறதென்று இச்செய்யுளிலே கூறப்பட்டிருக் கிறது.

பிராரத்துவவினை இப்பிறவியிலும் பாவச்செயல் களிலீடுபடச் செய்யும். உணர்ச்சி வேகத்தினுல் மனத்தைச் செல்லவிடாது அமைதியாகச் சிந்தித்து செயலாற்றினுல் பாவச்செயல்களைத் தவிர்க்கலாம். பாவச்செயல்கள் கடவுளுடைய கோபத்திற்கு ஆளாக்குமென்ற பயமும் மக்களுக்கு இருக்க

வேண்டும். இவ்விதமான வாழ்வு இப்பிறவியில் அமைதியான வாழ்க்கையைக் கொடுப்பதுமல்லாமல், பிராரத்துவவினை தேய்ந்து போவதற்கும் உதவியாக இருக்கும்.

இவ்வுலகில் செல்வம், கல்வி, குலம், குடும்பம், நிலம் ஆகிய பல பற்றுக்கள் மனதை இழுத்துச் செல்வதால் பிறவியை நீக்குவதற்கு ஒரே ஒரு துணையாக இருப்பது இறைவனுடைய பாதங்கள் என்பதை மக்கள் மறந்துவிடுகின்றனர். பற்றுள்ள பொருள்கள் நிலையற்றன; துன்பத்தைத் தருவன என்று எண்ணுது பைத்தியம்பிடித்தவர்கள் போல உலகப்பற்றுக்களிலே அமிழ்ந்துவிடுவதைப்பார்த்து நாம் பரிதாபப்படவேண்டும். இவைகளைவிட இறப்புப் பிறப்பு என்ற கலக்கமும் உண்டாகிறது. தன் பற்றை இறைவனிடத்து வைத்த மணிவாசகப் பெருமானுக்குச் சிவபெருமானே குருவாக எழுந்தருளி ஆட்கொண்டார்.

''வைத்த நிதிபெண்டீர் மக்கள் குலங்கல்வியெனும்
பித்தஉலகிற் பிறப்போடிறப் பென்னுஞ்
சித்தவிகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத்தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.''

என்ற திருவாசகத்திலிருந்து மணிவாசகப் பெருமான் கூறியிருப்பதை அறியலாம். உலக வாழ்க்கையிலீடுபட்டிருக்கின்றவர்கள் மனைவி மக்கள், சொத்துக்கள் ஆகியவற்றிலே அதிகப்பற்றுடையவராகக் காணப்படுகின்றனர். பிறந்த நாம் இறப்பது திண்ணம் என்பது தெரியும். இறக்கும் பொழுது கூடச்செல்வது இருவினைப் புண்ணிய பாவமுமாகும். வேறு ஒன்றும் பின்தொடர்ந்து செல்லமாட்டாது. எடுத்த பிறவி ஒவ்வொன்றிலும் அனுபவிக்குங்கால் பழைய கன்மங்கள் தொலைந்

தால் ஆத்மஈடேற்றம் படிப்படியாக ஏற்படும். அதற்குப் பதிலாக எடுத்த இம் மானிடப் பிறவி யிலேயே மீண்டும் பாவங்களைச் செய்து துன்பக் கடலிலே ஆளாக நேரிடுகிறது. ஆகையால் இல்ல றத்திலிருக்கும் ஒருவன் நிலையற்ற பொருட்களிலே அளவுகடந்த பற்றை வைக்காது, கனவிலும் பிற உயிர்களுக்குத் தீமை நினையாது கடமை புரிகிற வனாக வாழவேண்டும். மண்ணுக்கும், பொன்னுக் கும், புகழுக்கும் தீயமுறைகளைக் கடைப்பிடித்தும் ஓயாது உழைக்கின்ற மாந்தரைப் பார்த்து இரங்க வேண்டும். உலகத்திலே இன்பமாக வாழ்வதற்கு இவைகள் இன்றியமையாதன. ஆனால் அன்பு, இரக்கம், தருமசிந்தை கொஞ்சமேனும் இல்லாது பொருளைத்தேடி வைத்து இறக்கின்றவர்களின் அறியாமையை என்னென்று சொல்லலாம்.

இல்லறத்திலிருக்கும் ஒருவர் பற்று ஒன்றுமில் லாது இருக்க முடியாது. இல்லறவாழ்க்கையை நடத்துவதற்குப் பொருள் தேவை. மனைவி மக்கள், உற்றார், அயலார் ஆகிய பலருக்கும் செய்ய வேண் டிய கடமைகளும் உண்டு. ஒருபற்றுமற்ற ஞானி போல் நடந்துகொள்ள முடியாது. ஆகையால் ஆன்மஈடேற்றத்திற்குத் தடை ஏற்படாத முறையில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று அறிதல் வேண்டும். ஒருவர் வாழும் இடத்திற்கருகே பலர் பெருஞ் செல்வத்தோடும், தேக சௌக்கியத்தோ டும் இடம், பொருள், ஏவல் ஆகியவற்றோடு சந்தோஷமாக வாழக்கூடும். அவர்கள் பூர்வத்தில் செய்துவைத்த புண்ணியத்தின் பலனாகவே அவ் விதம் வாழ்கின்றார்கள் என்று யோசித்துத் தானும் புண்ணியத்தைச் செய்வதால் தனக்கும் அவ்வித வாழ்வு ஏற்படும் என்பதைச் சிந்தையில் வைத்து இப்பிறவியிற் புனிதமான பெரு முயற்சியிலீடுபட வேண்டும். அவ்விதம் நடந்துகொள்ளாது மற்ற

வர்களின் மீது பொருமை கொண்டு தீயவழிகளில் நடந்துகொள்ளும் ஒருவர் மேலும் மேலும் பாவத்தைச் செய்து துன்பத்திற்காளாக நேரிடும். ஆனால் அவர் தன் நிலையைத் திருத்துவதற்கு விடாமுயற்சியிலீடுபட வேண்டும்.

''தெய்வத்தாலாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்.''

என்ற திருவள்ளுவரின் திருவாக்கை ஞாபகத்தில் வைத்து பிறரைப் பார்த்து மனத்தைத் துன்பப் படுத்தாமல் முயற்சியிலீடுபட வேண்டும். அதுவுமல்லாமல் முயற்சி செய்யும்பொழுது பலனை எதிர் பார்த்துச் செய்ய வேண்டியதில்லை. முயற்சியின் பலன் தானாகவே வந்து சேரும். 'முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்' என்ற அப்பெரியாரின் திருவாக்கின் உண்மையை நாம் உலகத்திலே காண முடியும்.

இல்லறத்தவன் பஞ்சமா பாதகங்களிலிருந்து விலகி ஒழுகுவதோடு இறைவனின் பாதங்களை எந் நேரத்திலும் நினைத்து வாழ்ந்தானாகில் பிறவிக் கடலை நீந்துவதற்குரிய வழி தோன்றும்.

'துஞ்சலும் துஞ்சலிலாத போழ்திலும்
நெஞ்சக நைந்து நினைமின் நாடொறும்'

என்று திருஞானசம்பந்த சுவாமிகள் கூறுவதைக் கவனிக்கலாம். நித்திரையிலும் விழிப்பாயிருக்கும் பொழுதும் மனத்தினாலுருகி தினமும் இறைவனை நாம் நினைக்க வேண்டும். இறைவனுடைய நாமத்தை என்றும் கூறுவதனாலே நாம் செய்த பழவினை தேய்ந்து போவதோடு இப்பிறவியில், பாவச் செயல்களிலிருந்து நீங்கி நடக்கவும் மறுமைக்கு ஈடேற்றத்தைப் பெறுவதற்கும் அதுவே துணை புரியும்.

"நல்லவர் தீயவரெனாது நச்சினர்
செல்லல் கெடச் சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்
தல்லல் கெடுப்பன வஞ்செழுத்துமே!"

என்ற சம்பந்தர் தேவாரத்தை உற்று நோக்கினால் உண்மை புலப்படும்.

ஆகையால் மானிடப் பிறவியெடுத்த நாம் முன் சென்மங்களின் கன்மத்தின் பலனாகப் பிறந்து விட்டோம் என்பதை உணர்ந்து இவ்வுலகத்தில் வாழும் காலத்திலே பாவங்களினின்று விலகி இறைவனை மனம் வாக்கு, காயத்தாற் பிரார்த்தித்து ஒழுக்க சீலராக வாழ்ந்துபடிப்படியாகப் பிறவிக் கடலை நீந்தி பேரின்ப வாழ்வை எய்த முயற்சிக்க வேண்டும். ஆத்மாக்கள்மீது கருணை கொண்ட இறைவன் துணை செய்வதற்கு எந்நேரமும் சித்தமாயிருக்கிறார்.

## ராமநாமத்தின் பெருமை

ராமன் பெயரினால் பிண்டம், பிரம்மாண்டம் எல்லாம் ராமன் பெயர் கேட்டு உண்மை தெரியாமல் பிரமை அடைகிறது. நிர்க்குணம் நிராகாரத்துக்கப்பால் பரப் பிரமம் இருக்கிறது. அதன் பெயர்தான் ராமன் அல்லது ரரங்காரம் என்று அறியப்படுகிறது. விஷ்ணு பூஜை செய்கிறார்; சிவன் தியானம் செய்கிறார்; பிரம்மா பலவாறு புகழ் பாடித் துதிக்கிறார். யாரும் பேசிக் கரை ஏறி விட முடியாது. முடியப் புகழ்ந்துவிட முடியாது. ராம நாமம் சொல்ல முடியாத கதை;

— *கபீர் அருள் வாக்கு* —

# மனிதப்பிறவியே புனிதப் பிறவி

—மாத்தளை—
அருணேசர்

[17-7-70 சஞ்சிகையின் தொடர்ச்சி]

அதாவது, இந்த உலகில் உள்ள மற்ற உயிர்களிடம் இருக்கிற தத்துவத்தைக் காட்டிலும், மனிதருடைய தத்துவத்தையே மேலானதாக்கித் தந்திருக்கிருர் கடவுள்.

அவரைத் தியானிக்க மனதையும், தரிசிக்க கண்ணையும், அஞ்சலிக்க கைகளையும், வணங்க தலையையும், துதிக்க வாயையும் கொடுத்ததுமல்லாமல், விதிவிலக்குகளைத் தெரிந்து கொள்வதற்குக் கருவியாக வேத நெறிகளையும், அதை ஆராய்ந்துணர்தற்குப் பகுத்தறிவையும், உணர்ந்தபடி ஒழுக சக்தியையும் அருளியிருப்பதனுல் அந்தந்தப்படி நடந்து அரிதாக வாய்த்த இப்பிறவியின் மூலமாய்ப் பயனடைய வேண்டும்.

பகுத்தறிவைக்கொண்டு நம் பகைவர்களாகிய காம குரோத மத மாச்சரியங்களை எதிர்த்துப் போராடி அவை நம்மை அணுகாதவாறு செய்தலே அப்பயன்.

> ''ஒவ்வோருயிரும் உலகின் வினைக்கணியாய்
> தெய்வம் படைக்குமெனத் தேர்''

என்றபடி ஒவ்வோருயிரும் ஒரு குறித்த வினையைச் செய்யவே உலகிற் பிறந்தது. தத்தமது வினை

யைச் (நல்லறத்தை) செய்யக் கடவுளால் உயிர்களுக்குக் கொடுக்கப்பட்ட காலத்திற்கே 'ஆயுள்' எனப்படுகிறது.

இவ்வறத் தொழிலுக்காகவே வாழ்கிறேம். அது மறைந்ததும் இறக்கிறேம். "வினைப் போகமே யொரு தேகங் கண்டாய் வினை தானொழிந்தால், தினைப் போதளவு நில்லாது கண்டாய்" என்று பட்டினத்தார் கூறுவதும் காண்க.

யாவரும் இன்பத்தை அடைய விரும்புவார்களே தவிர துன்பத்தை அனுபவிக்க ஒருவரும் விரும்ப மாட்டார். ஆயின் அடுத்த பிறவியில் இன்பத்தை அடைய விரும்புவோர் இப்பிறவியிலேயே நன்மை செய்வதில் ஊக்கம் உடையவராயிருத்தல் வேண்டும்.

எனவே நாமனைவரும் அவ்விறைவனை வணங்கித் தொழுது நம் ஊழ் வினையால் வந்த இப்பிறவித் துன்பத்தை நீக்க முயல்வோமாக.

ஓம் தத் சத்

★

# ஆண்டவன் பெருமை

எல்லா உலகத்துக்கும் ஒரே காலன்தான். ஒரே பெயர் தான் உலகத்துக்குப் பிரியமானதும். பெண் ஆண் என்று ஒன்றும் சொல்ல முடியாது. (ஒன்றும் மாறுபாடு இல்லை) எல்லா உருவத்துள்ளும் அவர் அடங்கியிருக்கிறுர். உருவம் கொண்டது அருவமானது என்று ஒன்றும் பேச முடியாது. லேசானது, கனமானது என்று நிறுத்துக் கொள்ள முடியாது. பசியும் இல்லை, தாகமும் இல்லை. வெயிலும் இல்லை, நிழலும் இல்லை. அந்த நிலையில் துக்கம், சுகம் ஒன்றும் இராது. அதனுடைய எண் (கருத்து) அபரம்ம், பரம்ம் முதலிய வழிகளில் இல்லை. கபீர் கூவிச் சொல்கிறுர்; அதை அற்புதம் என்று சொல்.

— கபீர் அருள் வாக்கு

# இயற்கையே சோதிடம்

ச. இ. அப்புத்துரை (J.P.) சோதிடர் — வெள்ளவத்தை

## 25ம் பாடம் சனி. (முன் தொடர்ச்சி)

ஈசன், இயற்கை, ஆண்மை, சிருஷ்டி, சமூகம், உடல், யக்ஞம், தானம் தவம், இவை பிறம் பானவைகளல்ல. கடமைகளை பாவனையுடன் நிறை வேற்றினுல் நம் வாழ்க்கை சுதந்திரமும், சமூக மும் பெற்றுத்திகழும். தனிமனிதனையும் சமூகத் தையும் உண்மையில் வேருகப் பிரிக்க இயலாது. அகச்சுத்தியின் முறையை அனுசரித்து நடப்பீர் களாயின், சமூக நன்மை, தனிமனிதனின் நன் மைக்கும் வேற்றுமை எழுவதற்கிடமில்லை. கீதை யின் இவ்விதியை அனுட்டிக்கும் ஒரேமனிதனிருப் பினும் அவன் ஒருவன் மூலமாக நாடு முழுவதும் சிறப்பெய்தும். ஒரு நாடென்பது அந்நாட்டிலுள்ள மக்களே. இத்தகைய மக்கள் ஞானமும் ஆசார சீலர்களாகவுமிருப்பின் அந்நாடு தெய்வீக நாடா கிறது.

ஸ்ரீ பண்டிதமோதிலால், காந்திஜி, ரவிந்திரநாத் தாகூர், நேருஜி, இந்திரா காந்தி, விநோபாஜீ யோடு மேரு மலை, கங்கை, இலங்கையும் சேர்ந்தே இந்தியாவாகிறது. இதுவே பிறநாட்டவரின் கற் பனையாகிறது. இவை விரிவடைவதெப்படி எனில், பாலிலிருந்து தயிரும், தயிரிலிருந்து வெண்ணெய் யும் மோரும். பால் தயிருக்கும், வெண்ணெய் மோருக்கும் சண்டையில்லை. பாலின் தரம் காண அதில் எவ்வளவு வெண்ணெய் இருக்கிறது எனப் பார்க்கப்படுகிறது. இவ்வாறு சமூகத்தின் உயர்வு

தாழ்வு, யோக்கியதை அதிலுள்ள மனிதர்களினுல் பார்க்கப்படுகிறது. (நிர்ணயிக்கப்படுகிறது) ஒருவனைவிட இன்னொருவனிடம் அதிக செல்வ மிருந்தால், என்ன நாட்டம்! ஆம். எவரும் சிரம நிலையில் எளிமையில் இருத்தல் கூடாதுதான். சீமான்கள் செல்வம் சமூகத்திற்குப் பயன்பட்டு வருமாயின் அதுவே போதும். என் சட்டையின் வலது பையில் பணம் இருந்தாலென்ன? இடது பையில் பணமிருந்தாலென்ன? பார்க்கப் போனுல் இரு பைகளும் என்னுடையது தானே? எவரோ ஒருவர் சீமானுனுல் அதனுல் நானே சீமானுனேன் நாடே செல்வம் பெறுகிறது என்று நாம் நிரூபிக்க முடியும். ஆனுல் நாமோ வேற்றுமைகளை எழுப்பு கிருேம். உடலும் தலையும் வேருனுல் இரண்டுமே இறந்து போகும்.

இதே போன்று சூரியன் பரிசுத்தமானவன், கட்டற்றவன், நெறிதவருதவன் இவனது ஆணை யின்கீழ் அகில சராசரங்களும் இயங்குகிறது. இவரது முதலாவது மைந்தன் சனிபகவானே தவசீலன் சுதர்மவழியில் நடப்பவன். நேர்மை குன்ருதவன். பாகுபாடற்றவன். பற்றில்லாது கடமைகளைச் செவ்வனே செய்பவன். இச்சனீஸ் பரனிடத்திலேதான் சங்கார கர்த்தாவாகிய சங்க ரன் மக்களாகிய எங்களின் ஆயுள்பாகத்தை ஒப்ப டைத்து விட்டார். இவன் ஆணையின்படியேதான் (யமதர்மராஜனும்) இவரது அட்டங்களில் வசிக்கும் சீவர்களும் சீவிக்கிருர்கள்.

இவர்களிடம் யோக்கியதை யுத்திபுத்தி, அமைதி, அடக்கம் பொறை முதலிய ஞான சாஸ்திரவிற் பன்னரும், வான சாஸ்திரம், பூமி சாஸ்திரம் சோதிட சாஸ்திரம், பொறியியல், கணிதம், விஞ் ஞானம், மாலுமி சாஸ்திரங்களோடு ஆன்மலாபம்

முதலிய சதுர்தசபுவனமாகிய ஈரேழு பதினுலு உலகங்களிலும் நடக்கும், நடக்கப் போகும், நடந்தனவாகிய முக்காலங்களையும் அறியும் தத்துவ ஞான சீலர்களே சனிபகவானது உலகில் மண்டலத்தில் வசிக்கிருர்கள் என்பது அறிவாலுணர முடிகிறது.

## சனீஸ்வரனின் சுதர்மம் 3.

சுக்கிரனைக் கண்ணிழக்க வைத்தாய், இலங்கை வேந்தன் தலை பத்தும் சிந்த வைத்தாய், இரணியனின் உடலை நகத்தால் கிளியவைத்தாய், சீதைதனைக் கானகத்தில் அரக்கனுல் தூக்கவைத்தாய், பேர்விளங்கு திரிபுராதிகளை தீயினுல் வேகவைத்தாய், மாலின் சக்கரத்தால் உயிரிழந்தான் சலந்திரனும், தாரகாசூரனைச் சமரில் மாள வைத்தாய், தக்கன் யாகத்தைச் சிதைய வைத்தாய், ஆதி முதல்வன் ஐங்கரனை கொம்பறவே செய்தாய், அறு முனிவர்களின் மனைவியரின் கற்புக்குப் பங்கம் வைத்தாய், சந்திரனின் கலைகளை இய்க்கச் செய்தாய், சங்கரனை வாணிவிச்சி வீட்டில் பிட்டு உண்ண வைத்தாய், பிரம்படி பாண்டியனுல் பெறவும் வைத்தாய். அரிச்சுனனுல் வில்லடி படவும் செய்தாய், தேவர்களை சூரனுல் சிறையில் வைத்தாய், மாது துரோபதையின் துயிலையுரிய வைத்தாய், அம்மையப்பனை பிரிய வைத்தாய். பிரமனின் தாளில் விலங்கு போட வைத்தாய், பொதியமலையிலகத்தியனை பொதிய வைத்தாய், அப்பரைக் கருங்கல்லோடு கடலில் விட்டாய், அரனடியில் முயலகனையடங்க வைத்தாய், செப்பு மாணிக்கவாசகரைச் சிறையிலிட்டாய்.

ஸ்ரீ ராமனை மச்சவுருவெடுக்கச் செய்தாய், ஒப்பிலா அனுமனின் வாலில் தீயையிடவைத்தாய் கடல் நஞ்சுண்ண வைத்து அரனர் கண்டத்தைக் கறுக்க வைத்தாய், வாதக்காலாக்கி அரனை அண்டமெல்லாம் ஆடவைத்தாய், சனிபகவான் தன்னையும் தான் ராவணனின் தண்டத்தால் கால் முறிய வைத்தான். சூரியனின் தவக்குமாரனும் முதுமகனுமாகிய சனீஸ்வரன் தமக்கோ பிறர்க்கோ எவராயினும் தன் கடமைகளைச் செவ்வனே செய்யும் சுதர்மமுடையோனுவன். கடமை தவருதவன். நேர்மை குன்ருதவன். தவத்தைக் காப்போனுமாம்.

இந்திரன் (URANUS) கிரகம் யூரானஸ் இக்கிரகம் சனிக்கிரகத்திற்கு அப்பால் இருக்கிறது. இதை 1690-ம் ஆண்டு வானசாஸ்திரிகள் கண்டு 1781-ம் ஆண்டு (SIR WILLIAM HERSCHEL) சேர் வில்லியம் ஏர்ச்சல் என்பவர் முதன் முதல் கண்டார். இக் கிரகம் சூரியனிலிருந்து 175, 38, 69,000 மைலுக்கு அப்பாலுள்ளது. இவற்றின் குறுக்களவு, 33547 மைல். நாடி ஒன்றுக்கு 5985 மைல் வேகத்தில் சென்று சூரியனை 30687 நாட்களிற் சுற்றிவரும். இக்கிரகத்தைச் சுற்றி ஆறு சந்திரர்களுண்டென்று கருத்து வெளியிட்டுள்ளனர்.

வருணன் (Neptune) நெப்தியூன் கிரகம் (DR—GALLE) என்னும் வான சாஸ்திரி 1846-ம் ஆண்டு புரட்டாதி 18-ந் திகதி தூரதரிசி மூலம் அறிந்தார். பின் நெப்தியூன் கிரகமெனத் தெளிந்தார். சூரியனிலிருந்து 274,59,98,000 மைல் தூரத்திலிருந்து நாடி ஒன்றுக்கு 4783 மைல் வேகத்தில் சென்று சூரியனை 60,127 நாட்களில் சுற்றி வரும். இக்கிரகத்திற்கு ஒரு சந்திரனுமிருக்கிறது.

சமய நூல்கள்

# மலிவு விற்பனை

ஆத்மஜோதி சந்தா நேயர்களுக்கு

## அரிய சந்தர்ப்பம்!

ரூபா பத்து அனுப்பு வோருக்கு ஆத்மஜோதி வெளியீடான பத்து நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு இந்த விலைக்குறைப்பு மூன்று மாதங்களுக்கு மட்டுமே.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி:

**ஆத்மஜோதி நிலையம்**
**நாவலப்பிட்டி.**


---

ஆத்மஜோதி ஆயுள் சந்தா ஆதரவாளர்:

திரு. எம். இராமலிங்கம்,
207, மெயின் வீதி,
நீர்கொழும்பு.

Registered at the G. P. O. as a Newspaper M. L. 59/300.

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்,

இறைவன் திருவருளினாலும்,
மகான்களின் நல்லாசியினாலும்,
பக்தர்களின் நல்லெண்ணத்தினாலும்
ஆத்மஜோதிக்கு 25-வது ஆண்டு ஆரம்பமாகி
7-வது சுடர் வெளிவந்துள்ளதை
அறியத்தருகின்றோம்.

சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தமது சந்தாவை உரிய காலத்தில் அனுப்பி வைப்பதோடு ஒவ்வொரு புதிய அன்பர்களைச் சேர்த்து உதவினால் ஆத்மீகம் பரவுவதற்கு உதவி செய்தவர்களாவீர்கள்.

## ஆத்மஜோதி நிலையம்,

## நாவலப்பிட்டி (இலங்கை).

அச்சிடுவிப்போர்:- ஆத்மஜோதி நிலையத்தினர்.
அச்சிடுவோர்:- ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.
வெளியிட்ட திகதி:- 15-6-73.